பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 65 | வியாழக்கிழமை 30 ஜனவரி 2025 | தை 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056



## தமிழரசின் மூத்த தலைவர்
# மாவை சேனாதிராஜா நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், ஜனவரி 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜா (வயது - 83) நேற்று புதன்கிழமை இரவு காலமானார்.

» 11

### பொறுப்புக்கூறலில் அதிருப்தி
## இலங்கையுடனான உறவை மீளாய்வு செய்கிறது பிரிட்டன்



அமைச்சர் கத்தரின் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கத்திடம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்படும் அணுகுமுறையை எமது

☞ 11

## ஜனாதிபதி அநுர வருகை: போராடத் தடை விதிக்குக

### நீதிமன்றத்தை நாடிய பொலிஸார்

கொழும்பு, ஜன. 30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ள நிலையில், அவருடைய வருகையின்போது போராட்டம் நடத்துவதற்கு தடைவிதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

☞ 11

## சுற்றுலாத்துறையில் நியூஸி. முதலிடும்!

யாழ். பல்கலைக்கும் உதவிகள்

☞ 09

## குளத்தில் சாகசம்; இளைஞர் இறப்பு!

☞ 11

### அச்சகத்துக்குள்
## அடாவடி: ஆசிரியர் மீது முறைப்பாடு

வவுனியா, ஜன. 30

வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள அச்சகம் ஒன்றுக்குச் சென்ற ஆசிரியர், அங்கு இருவரை அழைத்து

☞ 11



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
## கலைப்பீடாதிபதியாகத் தொடர பேராசிரியர் ரகுராம் இணக்கம்!

யாழ்ப்பாணம், ஜன. 30

பேராசிரியர் எஸ்.ரகுராம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியாகத் தனது பதவியைத் தொடர்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். பேராசிரியர் ரகுராமின் பதவி விலகல் கடிதத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்

☞ 11

## பாலியல் விடுதியொன்று கோப்பாயில் முற்றுகை!

### சிறுமி உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் இயங்கி வந்த பாலியல் விடுதியொன்று நேற்று முற்றுகையிடப்பட்டு ஒரு சிறுமி உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தக

☞ 11




"மாவை ஐயாவுக்கு முச்சந்தி முரளியின்ர அஞ்சலி"

### ஐந்துக்கும் மேற்பட்ட கொள்ளை
## பாடசாலை மாணவன் 6 மாத மறுவாழ்வில்!

யாழ்ப்பாணம், ஜன. 30

கோப்பாய்ப் பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட கொள்ளைகள் மற்றும்

☞ 11



## 40,000 போதை மாத்திரைகள்: 5 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 30

40 ஆயிரம் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞ 11

## அர்ச்சுனா எம்.பி. நேற்றுக் கைது

☞ 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களுக்குத் தீர்வின்றிய

# அரசமைப்பு நிறைவேறினால் தமிழர் உரிமைகள் முடங்கும்!

## தோற்கடிக்க ஒன்றிணையவேண்டுமென கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன.30**

**தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எவ்வித நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாத நிலையில் பெரும்பான்மைப் பலத்துடன் உள்ள அரசாங்கம், ஒற்றையாட்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைபின் அடிப்படையில் புதிய அரசமைப்பை நிறைவேற்றினால் ஒற்றையாட்சிக்குள் தமிழர் விவகாரம் முடங்கும். இந்த ஆபத்தைத் தடுக்க நாம் விரைந்து செயற்படவேண்டும்.**

இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்திலுள்ள ஊடகவியலாளர்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெரும்பான்மை பலத்துடன் புதிய அரசாங்கம் அமைந்துள்ள நிலையில் புதிய அரசமைப்பு தொடர்பில் முக்கியத்து வம் கொடுக்கப்பட்டுள்ளது. 2015 - 2019 வரையான காலகட்டத்தில் இடம்பெற்ற ஒற்றையாட்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவின் அடிப்படையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்படவிருப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசு அறிவித்துள்ளது. இதுவரை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எவ்வித நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாத நிலையில் பெரும்பான்மைப்பலத்துடன் உள்ள அரசு கொண்டு வரும் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் அதன் பின்னர் ஒற்றையாட்சிக்குள் தமிழர்களின் விவகாரங்களை முடக்குவதாக அமையும். அந்த ஆபத்தில் இருந்து தடுக்கும் வகையிலேயே தமிழ்க் கட்சிகளை இணைக்கும் முயற்சியை நாம் முன்னெடுத்துள்ளோம். வடக்கு-கிழக்கை சேர்ந்த 19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் அவர்களில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களாவது ஒன்றுபட்டு ஒரே நிலைப்பாட்டை பெரும்பான்மையாக வெளிப்படுத்தவேண்டும். தேர்தல் ஆதாயம் நோக்கி இந்த முயற்சியில் நாம் இறங்கவில்லை. எனவே இந்த ஆபத்தைத் தடுக்கும் வகையில் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து விரைந்து செயற்படவேண்டும்-என்றார். (ச-100)

### உள்ளூராட்சித் தேர்தல்

# தென்னிலங்கையில் ஒன்றிணையும் கட்சிகள்

கொழும்பு, ஜன.30

தென்னிலங்கையின் முப்பெரும் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிடத் தயாராகி வருகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் குழு மற்றும் சர்வஜன பலய கட்சி ஆகியனவே இவ்வாறு இணைந்து போட்டியிடத் தயாராகின்றன. இந்த மூன்று கட்சிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் அண்மையில் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாக தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட பல காரணிகள் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது.

அதேவேளை அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து உள்ளாட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் என்ற திட்டம் எம்மிடம் உள்ளது என்றும் சர்வஜன அதிகாரம், கதிரைக் கூட்டணி என்பவற்றுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. சம்பிக்க ரணவக்கவையும் சந்தித்துள்ளோம். ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடவுள்ளோம் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

# ட்ரோன் தாக்குதல் கட்டுக்கதையே

கொழும்பு, ஜன. 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை இலக்குவைத்து ட்ரோன் தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்று மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் கூறிவரும் நிலையில், அது தொடர்பில் எவ்வித புலனாய்வு அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுநிலை) சம்பத் தூயகொந்தா அறிவித்துள்ளார்.

ட்ரோன் தாக்குதல் நடத்தப்படுவதாக இருந்தால் அது தொடர்பில் விசேட புலனாய்வு அறிக்கை இருந்திருக்கவேண்டும். அவ்வாறு எமக்கு எவ்வித அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்புத் தொடர்பில் புலனாய்வுப் பிரிவின் மதிப்பீடுகளுக்கமையவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஐ.தே.க.- ஐ.ம.ச.இணைவு அச்சத்தில் அரசாங்கம்

*ஹர்சன ராஜகருண எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.30

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைவு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அச்சத்தில் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற வலதுசாரிகள் பிளவடைந்து இருந்ததால்தான் ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றார்.

இந்த இரு தரப்பின் இணைவென்பது அரசாங்கத்துக்கு நல்ல செய்தியாக இருக்காது. நிச்சயம் இது தொடர்பில் தேசிய மக்கள் சக்திக்கு அச்சம் ஏற்பட்டிருக்கும் என்றும் குறிப்பிட்டார். (ச-44)

# கட்சியிலிருந்து பிரிந்து சென்றோரை பகிரங்கமாக அழைக்கும் மஹிந்த

கொழும்பு, ஜன.30

கடந்தகாலங்களை மறந்து மீண்டும் கட்சியில் இணையவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனக் கட்சி உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினர்களை மஹிந்த ராஜபக்ச கடந்த திங்கட்கிழமை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துயையாடினார். அதிலேயே இந்தப் பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

கட்சி மட்டத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பேச்சுகளில் ஈடுபடுவதற்கு மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாகவும் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | D | 3 8 2 1 5 0 | 0439 |

**Super Ball** DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | 2705 | I | 07 08 31 60 |

**சனிதா** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | A | 28 45 54 74 | 4866 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் | மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | | 20 27 30 57 | 4417 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | O | 12 | 26 45 57 59 | 1881 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | Q | 07 12 28 74 | 2531 |

**JAYODA** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 29.01.2025 | புதன்கிழமை | B | 04 19 51 59 | 2099 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாகச் செயற்படுத்தப்படவுள்ள கிராமியக் கடன் திட்டம்

கொழும்பு, ஜன.30

புதிய சபிரி கிராமியக் கடன் திட்டம் - சருசார வட்டி நிவாரண திட்டத்தை 2025ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த நிகழ்ச் சித்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங் கீகாரம் வழங்கியது.

குறுங்காலப் பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சிறிய மற்றும் மிகச் சிறிய அளவான விவசாயிகளின் செயற்பாட்டு மூலதனத் தேவையை நிறைவேற்றுவதற்காக 'சருசார' புதிய சபிரி கிராமியக் கடன்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2020ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றது.

அண்மைக்காலத்தில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மத்திய வங்கி புதிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அவ்வாறான சலுகைக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இயலுமை மத்திய வங்கிக்கு இல்லை.

அதனால் 2025ஆம் ஆண்டிலிருந்து 'சருசார' புதிய கிராமிய கடன் திட்டத்தை வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வீட்டில் சிக்கியது பெருந்தொகை ஹெரோய்ன்

கொழும்பு, ஜன.30

முல்லேரியாப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடமுல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பெருந்தொகையான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோ 218 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டில் உள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் வழிகாட்டலில் சந்தேகநபர் பல்வேறு பிரதேசங்களில் போதைப்பொருள் விற்பனை யில் ஈடுபட்டிருந்தார் எனப் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது .(எ-இ)

## கிளி.மருத்துவமனையில் மோ.சைக்கிள் திருட்டு!

### கைவிரித்தது நிர்வாகம்

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி மருத்துவமனையில் பெண் ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளொன்று கடந்த 26ஆம் திகதி களவாடப்பட்டுள்ளது. அன்றையதினம் இரவுக் கடமைக்குச் சமுகமளித்த குறித்த ஊழியர் உந்துருளியின் திறப்பை அதிலேயே மறந்துவிட்டுச் சென்றுள்ளார். இரவு 10.30 மணியளவில் திறப்பைக் காணாத நிலையில் வாகனத் தரிப்பிடம் சென்று தேடியபோது அங்கு மோட்டார் சைக்கிள் காணாமற்போனமை தெரியவந்தது. அதனையடுத்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து மருத்துவமனையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவைப் பரிசோதித்தபோது அன்றையதினம் மாத்திரம் கமரா இயங்காதிருந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்திடம் பாதிக்கப்பட்ட பெண் ஊழியர் முறையிட்டபோதும் தம்மால் எதுவும் செய்ய முடியாதென நிர்வாகம் கைவிரித்துள்ளதாகக் கூறப்படு கின்றது. (ச-214, 113)

## சிலவகை வாகனங்களே இறக்குமதிக்கு அனுமதி !

கொழும்பு , ஜன. 30

வாகன இறக்குமதி தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் நான்கு வகையான வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர் சங்கத் தலைவர் பிரசாத் மானதுங்க தெரிவித்துள்ளார்.

25 ஆசனங்களைக்கொண்ட பஸ்கள், 10 தொடக்கம் 12 வரையான ஆசனங்களைக்கொண்ட பிரயாணிகள் ஹைஏஸ்கள், லொறிகள் என்பவற்றுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-22,6)

## இ.போ.ச. தலைவர் பதவி விலகினார்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன, பதவி விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் பதவி விலகியதை போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தால், அரச நிறுவனமொன்றின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர் பதவி விலகிய இரண்டாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. இதற்கு முன்னர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் தலைவர் செனேஷ் திஸாநாயக்க பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)




முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைச்ச கதையா வீட்டுக்கட்சிக்காக தங்கட வாழ்க்கையை அர்ப்பணிச்ச ஆக்களையெல்லாம் சிலர் காத்துக்குறைக்க வெளிக்கிட்டிட்டினம். ராஜபக்சக்களுக்கு வாலாட்டினவையும், அவைக்கு ஆலவட்டம் பிடிச்சவையும் இடையில வீட்டுக்கட்சிக்குள்ள பூந்து, அந்தக் கட்சியின்ர சின்னத்தின்ர தயவில வெண்டவை. அந்த வெற்றி அவைக்கு கண்ணை மட்டும் மறைக்கேலை, கட்சிக்காக உயிரைக் குடுக்கவும் துணிஞ்சு நிண்டவையின்ர தியாகத்தையும் மறைக்கப்பண்ணிப்போட்டுது. அப்பிடித் தியாகம் செய்தவை கட்சிக்குள்ள இருந்தால் ,தங்கட பருப்பு வேகாது எண்டதும் அவைக்கு வடிவாத் தெரியும். அதால பிளான் பண்ணி ஒவ்வொருத்தரா கட்சியில இருந்து கழட்டிவிடப்பாக்கினம்.

மாவையரையும் அப்பிடித்தான் தலைவர் பதவியில இருந்து இந்தச் சாணக்கியக் குஞ்சுகள் கழட்டிவிட்டவை. ஆனால் மாவையரின்ர பழைய வரலாறுகள் இப்ப கட்சிக்குள்ள வந்து நாட்டாமை காட்டிறவைக்கு எப்பிடித் தெரியும்? கட்சிக்காக இவையள் சிறைக்குப் போயிருக்கினமோ? இல்லாட்டி ஆமி சுடத் திரியேக்கையும் துணிஞ்சு மக்களுக்காக அரசியல் செய்திருக்கினமோ? ஒட்டுக்குழுவின்ர கோட்டையெண்டு தெரிஞ்சும் வெட்டு விழுந்தாலும் பரவாயில்லை எண்டு அதுக்க போயிருக்கினமோ? இந்தக் கொம்பு முளைச்ச கொம்பேறிமூர்க்கன்கள் படம் காட்டத்தான் சரி. ஆனால் இதையெல்லாம் மாவையர் செய்தவர். தன்ர உயிரை விட, குடும்பத்தை விட, தமிழ்த்தேசியமும், கட்சியும்தான் பெரிசு எண்டு அதுக்காகவே வாழ்ந்த மனிசனை இப்பிடி அலாப்பித்தனமா தலைவர் பதவியில இருந்து அகற்றினதை ஆரும் ஏற்றுக்கொள்ளவே மாட்டினம்.

சரி, அதுக்குப் பிறகாவது அவரை நிம்மதியா உவையள் இருக்கவிட்டினமோ. போன ஞாயிற்றுக்கிழமை மாவையர் வீட்டுக்கு பதில் தலைவரும், பதில் செயலாளரும் போயிருக்கினம். அவை இப்பிடி அங்க போகப்போயினம் எண்டதுமே "அப்பாவுக்கு இப்ப உடம்பும்,மனதும் சரியா இல்லை. இப்போதைக்கு ஒண்டும் கதைக்காதையுங்கோ. எல்லாம் சரிவர கதையுங்கோ" எண்டு அவரின்ர மகன் இவையிட்ட கெஞ்சியிருக்கிறார். ஆனால் இவைக்கு தங்கட அலுவல்தானே முக்கியம். அதால மாவையரை தனியவைச்சு ஒருமணித்தியாலமா ஏதோ கதைச்சுப் போட்டு போயிருக்கினம். அவை ரண்டுபேரும் என்ன கதைச்சவை எண்டு மாவையர் வீட்டுக்காரரிட்டக் கூட மூச்சுவிடேலையாம். ஆனால் என்னவோ அவரைத் தாக்கக்கூடியமாதிரி ஏதோ விசயம்தான் கதைபட்டிருக்கு எண்டு வீட்டுக்காரர் சொல்லுகினம். அவை ரண்டுபேரும் வந்திட்டுப் போனபிறகு மாவையர் ஒரே யோசினையில இருந்திருக்கிறார். அதுக்குப் பிறகுதான் இப்பிடி 'பிறசரில' அவர் சறுக்கியும் விழுந்திருக்கிறார். பதவிக்காக அலையிற கூட்டத்தில இப்பிடி மாவையர் மாதிரி கட்சிக்காக உழைச்சவைக்கு கடைசியில மன உளைச்சலும், வருத்தமும் தான் பரிசு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி


## குளவிகொட்டியதில் பாடசாலை மாணவர் உட்பட 15 பேர் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஜன.30

குளவிகொட்டுக்கு இலக்கான 9 பாடசாலை மாணவர்கள் உட்பட 15பேர் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் வீதியிலிருந்த குளவிக்கூடு ஒன்று கலைந்ததாலேயே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி

## அரியநாயகன்புலம்

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

## 31.01.2025 வெள்ளிக்கிழமை

## காலை 9.10 மணிக்கு

அனைவரும் வருக !!!

அருளின்பம் பெறுக !!!

## அன்று மாலை 7.00 மணிக்கு

**S.G. சாந்தன்** இசைக் குழுவினருடன்

தென்னிந்திய பிரபல பாடகர்கள்




ஸ்ரீநிதி மற்றும்

முகேஷ்

இணைந்து வழங்கும்

கும்பாபிஷேகத்தில் ஒரு

சங்கீத உற்சவம்

(CS/57359) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அத்துமீறலும் துப்பாக்கிச்சூடும்

பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திக் கைதுசெய்திருக்கின்றது இலங்கைக் கடற்படை. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தமிழக மீனவர்கள் காயமடைந்திருக்கின்றனர். உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் காயங்கள் இல்லையென்றாலும், மீனவர்களின் விவகாரங்களுக்கு அப்பாற்பட்டு சில தூதரக மோதல்களை இந்த அசம்பாவிதம் ஏற்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி அநுர தலைமையில் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் இருந்து தொலைவாகப் பயணிக்க எத்தனிக்கின்றது என்றும், சீனாவின் நேரடி ஊடுருவல் இலங்கைக்குள் அதிகரிக்கப் போகின்றது என்றும் அண்மைக்காலமாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையிலேயே பருத்தித்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்ற நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தின விடிகாலைச் சம்பவங்களை 'சிங்களக் கடற்படையின் அத்துமீறல்' என்ற கண்ணோட்டத்தோடுதான் இந்திய - தமிழக ஊடகங்கள் அணுகியிருக்கின்றன. தமிழக முதல்வர் ஸ்டாலின், சீமான், வைகோ, அன்புமணி உள்ளிட்ட தமிழகத் தலைவர்களும், புதுடில்லித் தலைமைகளும்கூட பிரச்சினையின் பின்புலத்தை ஆராயவோ - தீர்வுதேடவோ முனையவேயில்லை. ஆக மொத்தத்தில் வடக்குக் கடற்பரப்பில் இடம்பெற்ற இறுதித் துப்பாக்கிச்சூடாக இது அமையப்போவதில்லை என்பதைத்தான் இந்திய ஊடகங்களும் - இந்தியத் தலைமைகளும் மாறிமாறி பிரதியெடுத்துக்கொண்டிருக்கின்றன.

துப்பாக்கிச்சூடுகள் ஏற்கமுடியாதவை, கடற்பகுதியில் இடம்பெறும் பதற்றங்கள் களையப்படவேண்டியவை. இதில் இரண்டாவது கருத்து எவருக்கும் இல்லை. ஆனால், இவற்றுக்கெல்லாம் மூலகாரணமான அத்துமீறிய மீன்பிடியைக் கைவிடுவதற்கு இந்தியத் தரப்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே அது ஏன்? தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளைப் பயன்படுத்தி - அத்துமீறி நுழைந்து ஒவ்வொரு நாளும் தொன் கணக்கான மீன்களை இந்திய மீனவர்கள் அள்ளிச்செல்கின்றனர். இலங்கையில் கடல்வளம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் சில மீன்பிடி முறைமைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இழுவைமடி உள்ளிட்ட மீன்பிடி முறைமைகளை இங்குள்ள மீனவர்கள் அறியாதவர்கள் என்பதால் அவை தடைசெய்யப்படவில்லை. ஆக, ஒரு நாட்டில் சில மீன்பிடி முறைகளுக்கு அந்த நாட்டின் மீனவர்களுக்கே தடையிருக்கும்போது, இன்னொரு நாட்டு மீனவர்கள் - அத்துமீறி அடாத்தாக நுழைந்து- தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையைப் பயன்படுத்தி மீன்களை வாரிச் சுருட்டுதல் எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்?

வடக்குக் கடற்பரப்பில் ஒவ்வொரு முறையும் இவ்வாறான அசம்பாவிதங்கள் நேர்கின்றபோது, 'கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்திருக்கக்கூடாது', 'கச்சதீவைத் திரும்பப் பெற வேண்டும்', 'கச்சதீவுச் சட்டங்களின் அடிப்படையில் நாம் அத்துமீறவில்லை' என்ற கருத்தாடல்கள்தான் தமிழகத்தில் வலுப்பெறுகின்றன. அத்தகையவர்களிடம் கேட்பதற்கு ஒரேயொரு கேள்வி இருக்கின்றது. 'இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடிக்காக இலங்கையில் மாத்திரம் கைதுசெய்யப்படுவதில்லை பாகிஸ்தான், ஈரானிலும்கூட கைதுசெய்யப்படுகின்றனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கச்சதீவு இருப்பதைப்போன்று, இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏதேனும் தீவை இந்தியா தானமாக்கியிருக்கின்றதா?' இந்தியமீனவர்கள் தங்கள் கடற்பரப்புக்குள் மீன்பிடித்தால் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி கைதுசெய்யமுடியாதே. அதேபோன்று தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக அத்துமீறும் மீனவர்களை கைது செய்யாமல் இப்படியெல்லாம் எதிரிப்படையைக் கண்டதுபோல அவர்களைச் சுட்டுப்பிடிப்பதும் மனிதத்துக்கு ஒவ்வாதது. எனவே இத்தகைய அத்துமீறல்களையும், பதற்றங்களையும் தவிர்க்க இருநாட்டு அரசாங்கங்களும் முதலில், மீனவர் விவகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அவ்வாறில்லாமல் மீனவர் பிரச்சினையை மேம்போக்காக அணுகினால், அத்துமீறலும், கைதுகளும், சூடுகளும் தொடர்கதையாகிவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

வலி தவிர்க்கமுடியாதது.
துன்பமடைவது தவிர்க்கக்கூடியது.

– ஹருகி முரகாமி



## காற்றாலை மின்திட்டம்
# கொள்முதல் விலையை குறைப்பதற்குப் பேச்சு



கொழும்பு, ஜன.30
மன்னார் மற்றும் பூநகரி காற்றாலை மின்திட்டத்தின் கீழ் மின்சார கொள்முதல் விலையை ஒரு அலகுக்கு 6 அமெரிக்க சதத்துக்கும் கீழே குறைக்க அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துடன் அரசாங்கம் பேச்சு நடத்திவருகின்றது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஆரம்பத்தில் ஒரு அலகுக்கு 8.25 சதம் (டொலர்) என முன்மொழியப்பட்ட இந்தத் திட்டம் போட்டி ஏலம் இல்லாததால் விமர்சனங்களை எதிர்கொண்டது.
இந்தத் திட்டம் ரத்துச்செய்யப்படாது. இந்த ஒப்பந்தம் தொடர்பான விவாதங்கள் 2022ஆம் ஆண்டில் தொடங்கின.
புதுப் பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகள் அவசியமாகும். இதில் சூழல் பாதிப்புகள் இருக்கும். ஆனால் எமது நாட்டுக்கு அதிக பயன்தரும் வகையில் திட்டம் மாற்றியமைக்கப்படும். அதனாலேயே ஒரு அலகுக்கு 6 சதத்துக்கும் கீழான அமெரிக்கா டொலரை அரசாங்கம் முன்மொழிகிறது- என்றார். (எ-இ)

## யானைகள் இறப்புவீதம் சரிவு

கொழும்பு, ஜன. 30
கடந்த ஆண்டில் நாட்டில் யானைகளின் இறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன்படி, 2024 ஆம் ஆண்டில் 388 காட்டு யானைகள் உயிரிழந்த நிலையில், 2023 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 488 ஆகவும் பதிவாகியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மார்ச் 17 சா/தரப்பரீட்சை

கொழும்பு, ஜன. 30
2024(2025) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான கால அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதன்படி, மார்ச் 17 ஆம் திகதி முதல் மார்ச் 26 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும்.
இந்தப் பரீட்சைக்கான கால அட்டவணையை, www.doenets.lk என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 30
கடந்த நாள்களுடன் ஒப்பிடும்போது தற்போது முட்டையின் விலை சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.
அதன்படி சந்தையில் முட்டையின் விலை 25 - 30 ரூபா வரை பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பெண்கள் வினைத்திறன் சேவைக்கு பகல் பராமரிப்பு நிலையம் தேவை!

கொழும்பு, ஜன. 30
பெண் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொள்ள பகல் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முதலில் இந்தத் திட்டம் பெண் நாடாளுமன்ற உத்தியோகத்தர்களின் நலன்கருதி நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்படவேண்டும். பின்னர் ஏனைய அரச சேவைகளுக்கும் குறிப்பாக ஆசிரிய சேவைக்கும் விரிவுபடுத்தப் படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-22, 6)

நாளை
வெள்ளிக்கிழமை - தை - 18
31.01.2025
சுபநேரம் : 06.36 - 08.06
ராகுகாலம் : 11.06 - 12.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் கடத்தல்; டிப்பர் கைப்பற்றல்

சாவகச்சேரி, ஜன.30
அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத மாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனத்தை 10 கிலோமீற்றர் தூரம் வரை துரத்திச்சென்று சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

மீசாலை - புத்தூர் வீதியால் பய ணித்த டிப்பர் வாகனத்தை பொலி ஸார் மறித்தபோது சாரதி வாக னத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார். இதனையடுத்து வாகனத்தைப் பொலிஸார் துரத்திச்சென்றவேளை ஓரிடத்தில் டிப்பரை நிறுத்திவிட்டு அதிலிருந்தவர்கள் தப்பியோடி யுள்ள னர். பொலிஸார் வாக னத்தை மீட்டு பொலிஸ் நிலையத் துக்குக் கொண்டுவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ச-25,9)

# இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்குக் கரிநாள்

## எதிர்ப்புப் போராட்டத்துக்கு 'பொ-பொ' அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

**எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களாகிய எமக்கு கரிநாளாகும். அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை, ஆங்கிலேயரிடமிருந்து சிங்களப் பேரினவாதிகளுக்கு கைமாற்றப்பட்ட தினமாகும். இந்நாளில் சிங்கள அரசுக்கெதிரான தன்னெழுச்சியான போராட்டங்களை முன்னெடுக்க அணிதிரளுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் அந்த இயக்கத்தின் தலை வர் அருட்பணி து. ஜோசப்மேரி மற்றும் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத் திரு. வேலன் சுவாமிகள் ஆகியோர் விடுத்த அறிக்கையில் உள்ளதாவது:

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிகள் ஒன்றி ணைந்த பகுதிகள் இந்தத் தீவின் மூத்த குடிகளான தமிழ்மக்களின் தாயக பூமி யாக இருந்தது என்பதையும் அந்தத் தாயகபூமி இறையாண்மை உள்ள தனித் தேசமாக இருந்தது என்ற வர லாற்று உண்மையையும் மறுதலித்து எமது சுதந்திரம் சிங்கள தேசத்திடம் கைய கப்படுத்தப்பட்ட நாளாகவே இந்நாள் உள் ளது. இன்று ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி தம்மை மாற்றத்தின் நாய கர்களாகக் காட்ட முற்பட்டாலும் அவர்க ளின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டேயிருக்கின்றது.

இந்த அரசானது இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் தமிழ்மக்களின் தனித்துவத்தை அழித்து சிங்கள மேலாண்மையை நிறுவுவதில் மிகத் தீவி ரமாக ஈடுபட்டுவருகின்றது. எனவே ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தைத் தொடர்ச்சியாகத் தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க அறைகூவல் விடுக்கின்றோம் -என்றுள்ளது. (ச-26,66,27)



# பயிரழிவுகளுக்கு இழப்பீட்டுப்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 30
வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்க ளுக்கான இழப்பீடு வழங்கும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக விவசாய மற்றும் கமநல காப்பு றுதி சபை தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீடு பொலநறுவை, முல் லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோ ணமலை மாவட்டங்களில் 13,376 ஏக்கர் சாகுபடி நிலங்களுக்கு முதற்கட் டமாக வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. 6,234 விவசாயிகளுக்கு 166.7 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# நிரந்தர நியமனம் வேண்டும்

## டெங்கு களத்தடுப்பாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30
2017 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தற்கா லிகமாகவே பணியாற்றிவரும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்க் கவேண்டும் என்று கோரி வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகனிடம் மனுவொன்று கையளிக் கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர் கள், ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனை வலியுறுத்தினர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந் துரையாடுவதாக வடக்கு மாகாண ஆளுநர் உறு தியளித்தார். (ச-25-66)



# நடுவில் கொஞ்சம் சீரமைப்பைக் காணோம்

## காரைநகர் மக்கள் விசனம்!

### சிறந்த செப்பனிடலுக்கேயென அதிகாரசபை விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 30
காரைநகரில் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ள - மக்கள் அநேகமாகப் பாவனைக் குட்படுத்தும் வீதியை இடையில் விட்டுவிட்டு அதற்கும் அப்பா லுள்ள வீதி காப்பெற் இடப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

யாழ்பாணம் - மானிப்பாய் சங்கானை - சித்தங்கேணி - சுழிபு ரம் பொன்னாலை - வலந்தலை - களபூமி - காரைநகர் இறங் குதுறை இதுவே வீதிப் புனரமைப்பின் செயற்றிட்டமாக உள்ளது. தற்போது மூளாய் மருத்துவமனையிலிருந்து பொன்னாலைச் சந்தி வரையான வீதி புனரமைக்கப்படவில்லை. பொன்னாலைச் சந்தியி லிருந்து வலந்தலை வரை காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட் டுள்ளது. அத்துடன் வலந்தலை தொடக்கம் ஆலடி வரையான வீதி மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு மிகவும் மோசமா கச் சேதமடைந்திருக்கின்றது. இதற்கு முக்கியத்து வம் கொடுக்காமல் அதற்கும் அப்பால் சென்று ஆலடி தொடக்கம் வியாவில் வரை வீதிப் புனரமைப்பு இடம்பெறுகின்றது என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரிடம் வினவியபோது,

மூளாய் மருத்துவமனையிலிருந்து பொன்னாலைச் சந்தி வரை யான வீதியை இந்த வருடத்தில் நிதி கிடைத்ததும் செப்பனிடுவதற்கும் வலந்தலை தொடக்கம் ஆலடி வரையான வீதியை சிறந்த வீதியாக கொங்கிறீட் இட்டுச் செப்பனிடுவதற்குமே தீர்மானிக்கப்பட்டுள்ளதா கத் தெரிவித்தார். (ச-125,66)





# கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு புத்துயிர் அளியுங்கள்

வவுனியா, ஜன. 30
வவுனியா பூந்தோட்டம் பிரதேசத்தில் அமைந்துள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூ ரியை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என இயற்கையின் நண்பர்கள் அமைப்பு வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

1989 ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணங் கள் இணைந்திருந்த காலப்பகுதியில் அப் போதைய கூட்டுறவு ஆணையாளரால் திருகோணமலையில் உள்ள தனியார் கட் டடத்தில் கூட்டுறவுப்பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் திருகோணமலை கூட்டுறவு அபிவி ருத்தி ஆணையாளர் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டது. 2001 ஆம் ஆண்டு வவு னியா பூந்தோட்டம் பகுதியில் மாகாணசபை யால் காணி ஒதுக்கப்பட்டு அங்கு புதிதாகக் கல்லூரிக்கான கட்டடம் கட்டப்பட்டது.

எனினும் தற்போது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி கள் அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே நடத்தப்படுகின்றன.

எனவே இந்த விடயம் தொடர்பில் வடமா காண ஆளுநர் கவனம் செலுத்தி குறித்த பயிற்சிக் கல்லூரியை முழுமையாக இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண் டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. (ச-25,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைக்கு ஆள் தேவை**

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 076 578 9372

# பாடசாலை மாணவர் மத்தியில் அதிகரிக்கும் போதைப்பாவனை

## கடற்றொழில் அமைச்சர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், ஜன.30**

**பாடசாலை மாணவர்களிடையே போதைப் பழக்கம் அதிகரித்துள்ளது. கலாசாரம், பண்பாடுகள் அனைத்தும் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்றன. இவ்வாறு கடற்றொழில் நீரியல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். அகில இலங்கை சைவமகாசபையின் 75ஆவது ஆண்டு பவளவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- யாழ்ப்பாணத்தில் 7ஆம் தரத்தில் கற்கும் மாணவர்களின் புத்தகப்பையில் இருந்து அண்மையில் போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது பாடசாலை மானம் போய்விடும், இந்த விடயத்தை வெளியே சொல்லாதீர்கள் என்று அந்த அதிபர் கூறினாராம். அண்மையில் இரு மாணவர்கள் பாடசாலையில் போதையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டிருந்தனர்.

நாம் எங்கே சென்றுகொண்டிருக்கின்றோம்? எமது கல்வி, கலாசாரம், பண்பாடுகள் அனைத்தும் தற்போது சிதைந்து போய்க்கொண்டிருக்கின்றன. கூடுதலான மதுப்பாவனையுள்ள மாவட்டமாக இதுவரை நுவரெலியா இருந்தநிலையில் இப்போது யாழ்ப்பாணம் முதலிடத்துக்கு வந்துள்ளது. மதுவரித் திணைக்களம் யாழ்ப்பாணம் மாவட்டத்தை ஐந்து வலயங்களாகப் பிரித்துள்ளது. அதில் மல்லாகம் வலயத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு 60 ஆயிரம் மதுப் போத்தல்கள் விற்கப்படுகின்றன என்று அறியமுடிகின்றது. அதேநேரம் இலங்கையில் இணையத்தில் கெட்ட விடயங்களே அதிகம் தேடிப் பார்க்கப்படுகின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

அசுத்தங்களைச் சுத்தப்படுத்தாமல் சமூகத்தின் முன்னேற்றத்தை, நாட்டின் வளர்ச்சியை நினைத்துப் பார்க்க முடியாது. அசுத்தமானங்களைச் சுத்தப்படுத்த வேண்டும். அதனாலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவால் தூய இலங்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஏ-66)

எம் அருகில் நீ இல்லை!!
எம் நினைவில் நிழலாய் நீ!!

**5ஆம் ஆண்டு நினைவலைகள்....**

மலர்வு
இலங்கை
(யாழ்ப்பாணம்)
16.11.1954



உதிர்வு
(ஜேர்மனி)
30.01.2020

**அமரர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெயம்)**

இலைவடிவில் இதயம் இருக்கும்
அதில் மலைவடிவில் உன் நினைவும் கனக்கும்!!
பாசமுள்ள சோதரனே பாசமுடன் நாமிருக்கையில் பாரினிலே
எமை தவிக்க விட்டு எங்கு சென்றீர்??
இன்றைக்கல்ல என்றைக்கும் நீ எங்கள் பக்கத்தில்
நேசமுடன் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்!!
உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
எம் பெருமானை பிரார்த்திக்கின்றோம்...
ஓம் நமசிவாய!
சிவாய நம!!
தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!!

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(CR 44204) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
26.12.1976



மறைவு
28.01.2025

**விக்கினேஸ்வரன் சகிலா**

சின்னக்குளம், கந்தரோடை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் சகிலா அவர்கள் நேற்று முன்தினம் (28.01.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் சேயன்பு தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சசின்ஸ்ராஜ் தாட்சாயினி மற்றும் ஸ்கந்தராஜ் (கோபி), ஸ்தந்தராணி (கோமதி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, நாகபாக்கியம், நாகரத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் பேர்த்தியும் கனகசிங்கம், விஜிதா, நிர்மலி ஆகியோரின் மைத்துனியும் கிருஷாந்தின் (மயு) பெரியம்மாவும் சினேகா, சுவர்ணா, லக்சனா, வைஷ்ணவி ஆகியோரின் அத்தையும் காலஞ்சென்றவர்களான நடராஜா-நாகமனோன்மணி, காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் சுக்கிரவதி, காலஞ்சென்ற மனோகரதாஸ் மற்றும் சிவபதம்-நடனசபேசன், வைகுந்தவதி, குகதாஸ்-நாகயோகினி ஆகியோரின் பெறா மகளும் உதயசற்குணம், காலஞ்சென்ற சந்திரமதி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 07.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சின்னக்குளம்,
கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 642 8927
077 542 8937
077 548 6151

# மரண அறிவித்தல்



**திருமதி அருள்ராஜ பிரியதர்சினி (பிரியா)**

**(இளைப்பாறிய சுன்னாகம் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

தெல்லிப்பளை பார்மணியம் வீதியைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தையும் மஹபகே வெலிசறையை வதிவிடமாகவும் கொண்ட அருள்ராஜ பிரியதர்சினி அவர்கள் கடந்த 27.01.2025 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யேசுதாசன்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-அன்னபாக்கியம் தம்பதியரின் மருமகளும், மரினோ சுஜீந்திரன் (A.S.M.P யாழ் மாவட்டஇணைப்பாளர்) அவர்களின் அன்புத் தாயாரும் அபிராமியின் அன்பு மாமியாரும் கிமோறா கிஹானி, டெபேன் டக்ஷத் ஆகியோரின் அப்பம்மாவும் திருமதி மனோன்மணி சோமசுந்தரம், திருமதி நிர்மலா டி அல்விஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அற்புதராஜா, வேவி, வவா மற்றும் திருமதி மேரி யசிந்தா, திரு ஜெயராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2025) வியாழக்கிழமை மக்கள் அஞ்சலிக்காக சூராவத்தை இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதி வழிபாடு பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று தெல்லிப்பளை CACM கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
மகன்
077 301 5150
(CS/2404) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

**ஒரு சதுர அடி - 65 ரூபாய்**
**நிலம் இழுத்து பதிக்க - 90 ரூபாய்**

**077 334 1281**


## பெயர் மாற்றம்

வீரபத்திரர் கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட **இளையதம்பி நல்லம்மா** ஆகிய எனது பெயரினை **இளையதம்பி நேசம்மா** என மாற்றம் செய்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(29607) N-1 **வீ. நேசம்மா**

# கசூரினா கடற்கரையில் விஷப்பாசித் தாக்கம்!

அறுவர் பாதிப்பு; கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

காரைநகர் கசூரினா கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீராடிய ஆறு பேர் விஷப்பாசித் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு காரைநகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் காரைநகர் பிரதேச செயலரிடம் கேட்டபோது, விஷப்பாசித் தாக்கத்துக்குள்ளான ஆறு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக காரைநகர் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

விஷப்பாசிகளைக் கட்டுப்படுத்த வினாகிரி தேவை என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் அது கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது. கடந்தகாலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடக்கவில்லை. தற்போதே இவ்வாறு நடந்துள்ளது- என்றார். (எ-27)



## அமெ.மிஷன் த.க. பாடசாலையில் மதுஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களால் போதை ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வுப் பேரணியில் 'ஒழிப்போம் ஒழிப்போம் மதுவை ஒழிப்போம், தவிர்ப்போம் தவிர்ப்போம் வெற்றிலை பாக்கை தவிர்ப்போம், காப்போம் காப்போம் சமூகத்தைக் காப்போம்' என்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன. பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த பேரணி அம்பன் கிழக்கு வரை சென்று நிறைவடைந்தது. (ச-33-27)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **முருகேசு சங்கரப்பிள்ளை**
(ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்)
**திதி: பிரதமை**

நாட்களும், வாரங்களும், மாதங்களும்தான் அவை கடந்திட வருடங்களோ பதினாறு ஆகி விட்டதே! ஆனால் உம் பிரிவின் துயரமும் நினைவுகளும் என்றும் எம் மனம் விட்டு நீங்கிடாது அப்பா!

தோற்றம் 16.07.1931 மறைவு 26.01.2009

"மலரகம்"
கொட்டக்காட்டு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்

(cs.57332) (N-1)

## சைவபரிபாலன சபை- யாழ்ப்பாணம். நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் தேவை

சைவ சமய விழுமியங்களை மையக்கருவாக கடைப்பிடித்து செயல்படும் சைவபரிபாலன சபைக்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியான முழு நேர உத்தியோகத்தர்களை நியமிக்க உள்ளோம். மேற்படி பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது விண்ணப்பிக்க ஆர்வமுடையவர்கள் முழுமையான விபரங்களை கொண்ட சுயவிபரக்கோவையை **"தலைவர், சைவபரிபாலன சபை, இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 14.02.2025 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

செயலாளர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 06 . 1984

மறைவு 28 . 01 . 2025

# பூநாதன் கயூரன்

**(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூநாதன் கயூரன் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) நேற்று முன்தினம் (28.01.2025) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பூநாதன் (முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், டொறின் ரேணுகா (எழுதுவினைஞர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்புக் கணவரும், தூயகுமாரன் (ஓய்வுநிலை சிரேஷ்ட பாதுகாப்பு பரிசோதகர், யாழ். பல்கலைக்கழகம்), ஹேமநந்தினி (ஆசிரியை, யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாம் சந்தோஷ் மற்றும் சாம் கிங்ஸ்ரன் (யாழ். சென் பெனடிக்ற் வித்தியாலயம்), ஜோன் பிளேயர் (யாழ். சென் பெனடிக்ற் வித்தியாலயம்), சாள்ஸ் கிங்ஸ்ரன் (யாழ். சென் பெனடிக்ற் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகன், லௌசிகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற போல் கஜேந்திரன் மற்றும் டினேஸ்காந்த் (ஊழியர், பௌதிகவியற்துறை யாழ். பல்கலைக்கழகம்), பேணாட் ரிஷாந்த் (லண்டன்), போல் கஜேந்திரன் (மாணவன் பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), மைதிலி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷிகா (லண்டன்) அவர்களின் உடன் பிறவா சகோதரனும், ஷெரினா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அவர்களின் அன்புச் சிறிய தந்தையும், ஜோர்ஜ் யாதவ் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.01.2025) வியாழக்கிழமை 28 /3, திருமகள் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, செம்மணி வீதியில் அமைந்துள்ள நல்லூர் பரி / யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 28/ 3, திருமகள் வீதி,**
**அரியாலை மத்தி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs.57356) (N-1)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பாலசுப்பிரமணியம் தர்மசீலன்** B.Sc, Dip. in Edu
(பௌதிகவியல் ஆசான்)

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
இன்றோடு பத்து ஆண்டுகள் கடந்தாலும்
எம் விழிகளிலும் மனங்களிலும்
உங்கள் நினைவலைகள் மோதுகின்றன
கண்ணீர் ததும்புகின்றது.
நீங்கள் காட்டிய வழியும்
உங்களது அருளாசியும்,
அறிவுரைகளும்தான்
எம்மை வழிநடத்திச் செல்கின்றன.
உங்கள் மீளாநினைவுகளுடன் என்றும்.

தோற்றம் 23.02.1974 மறைவு 30.01.2015

குடும்பத்தினர்

(CR/44203) J-1

## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் பணியாளர் வெற்றிடம்

**ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிப்பதற்கும், சிறுவர் இல்லங்களின் பிள்ளைகள் பராமரிப்பாளர் பணிக்கும் விண்ணப்பம் கோரல்**

கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பிள்ளைகளின் தேவை கருதி அமைக்கப்படவுள்ள விழா மண்டப கட்டுமான வேலைகளினை முழுமையாக மேற்பார்வை செய்து சிறப்பாக செய்து முடிப்பதற்கு ஏற்ப தகுதிவாய்ந்த ஆண் தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிப்பதற்கும் எமது சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளை பராமரிப்பதற்கான ஆண், பெண் பணியாளர்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பின்வரும் தகுதியினை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 11.02.2025 இற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தங்களின் சுய விபரத்தினை பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

### தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான தகைமைகள்

1. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்
2. 25 - 55 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. NDT/HNDE or NCT(Civil/QS)/HND B.Tec Level 5 (Civil/QS) தகைமையினைக் கொண்டிருத்தல்வேண்டும்.
4. வேலை முன் அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது
5. நல்ல உடல் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

### பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்

1. வயதெல்லை 25 - 55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. க.பொ.த உயர்தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை
3. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
4. Child Care NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்

அனுப்பவேண்டிய முகவரி
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி
[illegible] / 0773240950

(CS 44202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக மீனவர்கள் மீது சூடு

# இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் போராட்டம்

சென்னை, ஜன. 30

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி கைதுசெய்ததைக் கண்டித்து, தமிழகத்தில் நேற்றுப் பரவலாகப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழக சட்டசபையின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் சார்பில் புதுச்சேரியில் மிகப்பிரமாண்டமான போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மீனவர்கள், பொதுமக்கள் என பல்லாயிரம் பேர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்துடன், மீனவ சங்கங்களின் ஏற்பாட்டில் காரைக்கால் பகுதியிலும் நேற்றுக் காலைமுதல் தொடர் போராட்டம் இடம்பெற்றுள்ளது. இந்தப் போராட்டத்திலும் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்படையின் அக்கிரமம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. ஆனால், இந்திய அரசாங்கமோ காத்திரமான எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்திய மீனவர்களின் படகுகள், வலைகள் இலங்கையால் அரசுடைமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது பிரச்சினையில் விரைவான தீர்வொன்றை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டும். அத்துடன், இலங்கை அரசாங்கத்துக்கும், இலங்கைக் கடற்படைக்கும் எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றனர். (ம)



# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் நேற்றும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 30


**வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் யாழ்ப்பாணத்தில் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியின் முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். அங்கிருந்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் வரை பேரணியாகச் சென்ற அவர்கள் அங்கு தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

(ம-26)

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 04 . 1940



மறைவு
26 . 01 . 2025

## சுங்கிலி சின்னவி (பொன்னு)

கைதடி வடக்கு, வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், செல்வநகர்,நாவற்குழி வடக்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுங்கிலி சின்னவி (பொன்னு) கடந்த 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுங்கிலி-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவலை-குஞ்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மூத்தவி, கந்தன், வள்ளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி, வெள்ளையன், குழந்தை மற்றும் இலட்சுமி, சின்னம்மா, கணேசன், பரமேஸ்வரி, இரத்தினம், தவமணி, மல்லிகாதேவி, செல்வமலர் காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை மற்றும் தம்பிஐயா, திருச்செல்வநாதன், பஞ்சலிங்கம் ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற இராஜபூபதி மற்றும் தவமணி, சறோசாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோதா, வசந்தா (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), ரவிதீஸ் (லண்டன்), பிரபாகலேந்திரன் (லண்டன்), பற்குலேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), ராதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கம், அற்புதராஜா (ஜேர்மனி), செல்வி (ஜேர்மனி), ஜீவா (லண்டன்), கனுஷா (லண்டன்), சிவறாஜினி, மயூதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், றஜீவன் (சுவிஸ்), நிறோஜன், சந்துரு (ஜேர்மனி), லாவன்ஜா (ஜேர்மனி), ஆகாஸ் (ஜேர்மனி), நிலக்ஷன் (ஜேர்மனி), சிநேகா (லண்டன்), மானுஷா (லண்டன்), கோகுல் (லண்டன்), அக்ஷன் (லண்டன்), லினுஷன், ஸ்ரெலினா (சுவிஸ்), காலஞ்சென்ற சுஜீனா ஆகியோரின் அன்புப் பேரனும், ஆலியாவின் (சுவிஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநகர்,
நாவற்குழி வடக்கு, கைதடி. (CS/57355) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 316 4431

# மீண்டெழுகின்றார் மஹிந்த ராஜபக்ச

## அநுரதான் காரணம், சம்பிக்க குற்றச்சாட்டு

அரசியல் ரீதியில் அநாதையாக்கப்பட்டிருந்த மஹிந்த ராஜபக்ச தற்போது மீண்டெழ ஆரம்பித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவில் அரசியல் அஸ்தமித்திருந்தது. அவர் அரசியல் ரீதியில் அநாதையாக்கப்பட்டிருந்தார். ஆனால், ஜனாதிபதி அநுர தலைமையிலான அணியினர் மேற்கொண்ட நடவடிக்கையால் மஹிந்தவுக்கு ஆதரவு அதிகரித்துள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறியவர்கள், மீண்டும் அவரைச் சந்தித்துள்ளனர். தமது ஆதரவை மஹிந்தவுக்குத் தெரிவித்துள்ளனர். இதற்கெல்லாம் ஜனாதிபதி அநுரதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நீக்கப்பட்டமை, மஹிந்த வசிக்கும் அரச மாளிகை அவரிடம் இருந்து பறிக்கப்படவுள்ளமை ஆகியனவே இப்போது ராஜபக்சக்களினதும், பெரமுனவினரும் அரசியலாக மாறியுள்ளது. இந்த வாய்ப்பை வழங்கியது ஜனாதிபதி அநுரதான் என்று சம்பிக்க ரணவக்க மேலும் சாடியுள்ளார்.

## அர்ச்சுனா...

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுப் புதன்கிழமை மாலை அநுராதபுரத்திலிருந்து வருகைதந்த விசேட பொலிஸ் குழுவினரால் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வாரம் அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை, பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர்கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நாடாளுமன்ற உறுப்பினரை விசாரணைகளின் பின்னர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கி உத்தர விட்டுள்ளது. (ம-26-125)

## சுற்றுலாத்துறையில்...

அதிகளவான நியூசிலாந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில், சுற்றுலாத்துறை மற்றும் கைத்தொழில், விவசாய உற்பத்தித் துறைகளில் இணைந்து செயற்படுவதற்கு நியூசிலாந்து ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான நியூஸிலாந்துத் தூதுவர் டேவிற் பைன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்துத் தூதுவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே, இலங்கையின் சுற்றுலாத்துறையில் இணைந்து செயற்படும் விருப்பத்தை நியூஸிலாந்துத் தூதுவர் வெளிப்படுத்தியுள்ளார்.

நியூஸிலாந்துக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், விவசாயம் மற்றும் கடற்றொழில், விளையாட்டு மருத்துவம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படக்கூடிய கூட்டுச் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நியூஸிலாந்து அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான இணைப்பு நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் முன்மொழிவையும் நியூஸிலாந்துத் தூதுவர் கோரியுள்ளார். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற் பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கி விடுவது நல்லது. தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும்.

# போதனாசிரியர் பதவி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம். ஜன. 30

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல், கட்டடநிர்மானத்துறை, மின்னியல்த்துறை ஆகிய கற்நெறிகளுக்கான போதனாசிரியர் (நாளாந்த அடிப்படை) வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிப்போர் க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 3 ஆம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.கியூ4 உடன் என்.வி.கியூ5 அல்லது அதற்குமேல் தொழிற்தகைமை சான்றிதழுடன் 1 வருட கற்பித்தல் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். தகைமையுடையோர் தங்கள் சுயவிவரக்கோவை மற்றும் கல்வி, தொழிற் கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் நாளை 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அஞ்சல் மூலமோ சமர்ப்பிக்கலாம். மேலதி தகவல்களுக்கு 0710318737, 0212227949 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (ச-25)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 30

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு சிறப்புப் பூசை, அபிஷேகம் என்பன இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார். (ச-17)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 30

சுன்னாகம் தாழையடி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 வரை நடைபெறவுள்ளது. (ச-22)



# டிறிபேர்க் கல்லூரியின் 'நகர்வனம்' செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவுநாள் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக 'நகர் வனம்' எனும் மரநடுகை நிகழ்வு சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்குச் சொந்தமான பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக "கிறீன் லேயர்" சுற்றுச் சூழல் அமைப்பின் தலைவர் பி.சசிக்குமார், டிறிபேர்க் கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், இயற்கை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத்திட்டத்துக்காக கல்லூரியின் பழைய மாணவரும் இயற்கை ஆர்வலருமான மருத்துவர் சி. சசிகரன் 50க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தார். (ச-25, 28)

# தேங்காய் விலை தினமும் உயர்வு

யாழ்ப்பாணம்.ஜன.30

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது.

ஒரு தேங்காய் 200 ரூபா முதல் 280 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காய் விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி தேங்காய் பருவத்துக்கு முன்பே தென்னைகளில் இருந்து பிடுங்கி விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காய்க்கு உரிய விலை நிர்ணயிக்கப்படாததால் அவை வேறுபட்ட விலைகளில் விற்கப்படுகின்றன என்றும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-33-17)



கொக்கட்டிச்சோலை இனப்படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் மகிழடித்தீவு சந்தி நினைவுத்தூபியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ம)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன. 30

ஊரெழு கணேசா வித்தியாசாலையில் புதிதாகச் சேர்ந்த தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா வித்தியாசாலையின் அதிபர் இ. ஜெயக்குமார் தலைமையில் வித்தியாசாலை வளாகத்தில் இன்று 30 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊரெழு அபிவிருத்திச்சங்கத் தலைவர் செ.சக்திரன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை ஆசிரியர் இ.தம்பிமுத்து, பழைய மாணவர் தி.உதயசூரியன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை....

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள தனது இல்லத்தில் நேற்று முன்தினம் தவறிவீழ்ந்த மாவை சேனாதிராஜா, தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

மாவை சேனாதிராஜாவின் தலையில் குருதிப் பெருக்கும், மூளையில் குருதிக் கசிவும் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அறிக்கையிட்டிருந்தது. எனினும், மாவை சுவாசக் கருவிகளின் உதவியுடன் தொடர்ச்சியாக உச்சக்கட்ட மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின்போது நேற்று இரவு காலமானார். அவருடைய மறைவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி உறுதிப்படுத்தியுள்ளார்.

**மாவை சேனாதிராஜாவின் வாழ்க்கைக் குறிப்புகள்**

1942ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்த மாவை சேனாதிராஜா வீமன்காமம் பாடசாலை, நடேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொண்டார். 1962ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்து முழுநேர அரசியலில் ஈடுபட்டார். 1966ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டுவரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

1969ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் ஒட்டுமொத்தமாக 7 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்தார். 1989ஆம் ஆண்டு அ. அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் சென்றார். 2000ஆம் ஆண்டுமுதல் 2020ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டார். 2014ஆம் ஆண்டு அவர் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அண்மையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். பதிலாக தமிழரசுக் கட்சியின் அரசியற்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

மாவை. சேனாதிராஜாவின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-26,66,125)

## இலங்கையுடனான...

அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்தவுள்ளது. இவ்வாறு பிரிட்டனின் இந்தோ பசுபிக் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கத்தரின் வெஸ்ட் தெரிவித்துள்ளார். இருநாள் பயணமாக கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு வந்திருந்த கத்தரின் வெஸ்ட், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொண்டார். யாழ்ப்பாணத்தில், அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும்போதே, பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை மீதான அதிருப்தியை முன்வைத்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், சமஷ்டி முறைமை உள்ளடங்கலாகத் தமிழர்களுக்கான அரசியற்தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, தற்போது அடையப்பட்டிருக்கும் முன்னேற்றம் தொடர்பாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன். அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் இதுதொடர்பில் கலந்துரையாடியபோதும், அவர்கள் ஓரிரு வார்த்தைகளிலேயே பதிலளிக்கின்றனர் என்றும் இந்தக் கலந்துரையாடலில் கத்தரின் வெஸ்ட் குறிப்பிட்டுள்ளார். கத்தரின் வெஸ்ட்டுக்குப் பதிலளித்த தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், தற்போதைய அரசாங்கம் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. பொறுப்புக்கூறல் விடயத்தில் எவரையும் நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதில்லை என்பதும் இந்த அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த அரசாங்கம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான தீர்வை வழங்கும் என்ற நம்பிக்கை இல்லை.

கடந்தகால அரசாங்கங்கள் அரசியற்தீர்வு தொடர்பாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் குறைந்தபட்சம் பேச்சுக்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளையேனும் எடுத்திருந்தன. ஆனால் தற்போதைய அரசாங்கம் அரசியற்தீர்வு தொடர்பாகத் தனது தேர்தல் அறிக்கையிலும் எதையும் கூறவில்லை. நடைமுறையிலும் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டினர்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அப்பால் இலங்கை அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை என்பதை கத்தரின் வெஸ்ட் ஏற்றுக்கொண்டார். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்பட்டுவரும் அணுகுமுறையை தமது அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்தவுள்ளது என்றும், இதுவிடயத்தில் வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (எ-இ)

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மற்றும் மக்கள் சந்திப்பு ஆகியவற்றில் ஈடுபடுவதற்காக ஜனாதிபதி அநுர நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார். அவருடைய வருகையின்போது, தமது வேலையில்லாப் பிரச்சினையை வெளிப்படுத்திப் போராட்டம் நடத்துவதற்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும் போராட்டத்தில் ஈடுபடவருமாறு அழைப்பு விடுத்திருந்தார். இந்தப் போராட்டங்களைத் தடைசெய்யுமாறு கோரியே யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பொலிஸார் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இதையடுத்தே, வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, குரலற்றவர்களின் குரல் அமைப்பைச் சார்ந்த கோமகன் உள்ளிட்ட ஐவரை இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகும் வகையில் அழைப்புக் கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. பொலிஸாரின் தடையுத்தரவுக் கோரிக்கை தொடர்பான மனுமீது இன்று மேலதிக விசாரணைகள் இடம்பெறவுள்ளன. (ம-26,125,20)

## குளத்தில்...

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் எச்சரிக்கையை மீறி மீண்டும் மீண்டும் பாய்ந்து சாகசம் காட்டியவர் உயிரிழந்துள்ளார். பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி ரமேஷ் (வயது 33) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மதுபோதையில் குளத்துக்குள் பாய்ந்த அந்த நபரை இளைஞர்களும், பொதுமக்களும் இணைந்து காப்பாற்றி கரை சேர்த்துள்ளனர். எனினும், அந்த நபர் இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் எச்சரிக்கையை மீறி மீண்டும் குளத்துக்குள் பாய்ந்தபோது காணாமற் போயுள்ளார். சில மணிநேரத் தேடுதலின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (சு-27,113)

## பாலியல்...

வலுக்கு அமைய அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இந்த பாலியல் விடுதி முற்றுகையிடப்பட்டது. விடுதியில் தங்கிநின்ற 17 வயதுடைய சிறுமியொருவர், 26 வயதுடைய யுவதியொருவர் மற்றும் 38 வயதுடைய ஆண் ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ம-26)

## கலைப்பீடாதிபதியாக..

துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா ஏற்க மறுத்துள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் தீர்மானத்துக்கு அமைவாக அவர் கலைப்பீடாதிபதியாகத் தொடரவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை நேற்றுக் கூடியது. இடைநிறுத்தப்பட்ட சில மாணவர்கள் தொடர்பாக ஏற்கனவே பேரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் நேற்றைய கூட்டத்தில் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அத்துடன், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளை உள்வாங்கவும் நிறைவேற்றவும் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்தே பேராசிரியர் ரகுராம் பதவியில் தொடரத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இதில் மேற்கொள்ளப்படும் முடிவுகளுக்கு அமைய, ஆசிரியர்கள் தற்போது மேற்கொண்டுவரும் போராட்டம் தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும் என்றும் தெரியவருகின்றது. (ம-66)

## அச்சகத்தினுள்...

அடாவடித்தனத்தில் ஈடுபட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள அச்சகம் ஒன்றில் நான்காம் தரத்துக்கான வேலைத்திட்டத்தை அச்சிடுவதற்காக ஆசிரியர் ஒருவர் சென்றுள்ளார். இதன்போதே, 'வேறு வேலைகள் இருப்பதால், ஒரு மணி நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படும்' என்று அச்சகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இதையடுத்து, அச்சிடும் பணிகளுக்கான பெறுமதியை ஆசிரியர் கோரியுள்ளார். 'அச்சிடப்பட்ட பின்னரே பக்கங்களின் எண்ணிக்கையைப் பார்த்து விலையை நிர்ணயிக்க முடியும்' என வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கூறியுள்ளார்.

'விலைகளை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்' என அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்ட ஆசிரியர் தொலைபேசியில் இருவரை அழைத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளரை அச்சுறுத்தியுள்ளார். இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-18)

## 40,000

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும், மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கு அமைய யாழ்ப்பாணப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே இந்த போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பரந்தன் மற்றும் முழங்காவில் பகுதிகளிலேயே இந்தப் போதைப்பொருள் மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பரந்தன் பகுதியில் வைத்து ஒருவரும், முழங்காவில் பகுதியில் வைத்து நால்வருமாகவே ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம-26,27,20)

## பாடசாலை...

வழிப்பறியில் ஈடுபட்ட பாடசாலை மாணவன் 6 மாதகாலம் மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மாணவனுக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, அவருடைய வயது மற்றும் மாணவன் என்பதைக் கருத்திற்கொண்டு நீதவானால் 6 மாதகால மறுவாழ்வுக்கு அவர் அனுப்பப்பட்டுள்ளார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவரின் அத்துமீறலே அசம்பாவிதத்துக்குக் காரணம்!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன.30**

**இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதே அனர்த்தங்களுக்கு வழிவகுக்கின்றது என்று தெரிவித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன்.**

வடமராட்சிக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது காங்கேசன்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைக் கைது செய்வதற்காகக் கடற்படையினர் அவர்களின் மீன்பிடிப் படகுகளில் ஏறியுள்ளனர். ஆயினும் கடற்படையினருடன் சேர்த்து படகுகளை இழுத்துச்செல்ல இந்திய மீனவர்கள் முயன்றபோது கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் பல வருடங்களாக நீடித்துவருகின்றது. இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடவேண்டாம், எமது மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கவேண்டும் என்று இந்திய மீனவர்களிடம் இதுதொடர்பாகப் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம். ஆனாலும் அத்துமீறல் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் எமது மக்கள் துன்பப்படுவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் கடற்படையினர் கைது செய்வது வழமை. அதற்கு ஒத்துழைக்காத போது சில அசம்பாவிதங்கள் நடக்கின்றன. இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாது மீன்பிடியில் ஈடுபடுவது தேவையற்ற அனர்த்தங்களைத் தவிர்க்கும் - என்றார். (எ-27)

# மஹிந்த ராஜபக்சவுக்காக நாடு கொந்தளிக்குமாம்!

## வீட்டு விவகாரத்தை வைத்து தெற்கில் பெரும் அரசியல்

கொழும்பு, ஜன.30

மஹிந்த ராஜபக்சவுக்கு ஏதேனும் நடந்தால் முழு நாடும் கொந்தளிக்கும். பின்னர் கோத்தாபய ராஜபக்ச சென்றதை விடவும் மோசமாகவே தற்போதைய அரசும் செல்ல நேரிடும். அதனால் மஹிந்த மீது கைவைக்கக் கூடாது.

இவ்வாறு எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- முப்படைப் பலத்தைக் கொண்டிருந்த புலிகள் அமைப்பைத் தோற்கடிக்கவே முடியாது என முழு உலகமும் சொன்னது. ஆனால் மாவிலாறுவில் ஆரம்பமான போரை முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவந்த தலைவர் தான் மஹிந்த ராஜபக்ச. அதனால் அதிகளவு பாதுகாப்பு உள்ள இடத்தில் தான் மஹிந்த ராஜபக்ச இருக்கவேண்டும். ஏனெனில் புலிகளின் நிழல் இன்னும் தொடரவே செய்கின்றது. அதே போல தடைவிதிக்கப்பட்டிருந்த புலிகளுக்கு புத்துயிர் கொடுக்கக்கூடிய ஆறு டயஸ்போரா அமைப்புகள் மீதான தடை ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் நீக்கப் பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் அரசியலை நாம் அனுமதிக்காதபோதிலும் போரை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவர் என்ற வகையில் அவரைப் பாதுகாக்க வேண்டும். மஹிந்த ராஜபக்சவை கொலைசெய்வதற்கான வேலைத்திட்டம் நடக்கின்றதா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. சந்திரிக்காவை நீக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மஹிந்தவை அகற்றப் பார்க்கின்றனர். மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப் பட்டுள்ளது. அவரை வீட்டைவிட்டு வெளியேற்றி, அவருக்கு ஏதாவது நடந்தால் அதற்கான பொறுப்பை ஜனாதிபதியும், அரசாங்கமும் பொறுப்பேற்கவேண்டும். மஹிந்தவுக்கு ஏதேனும் நடந்து நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டால், கோத்தாபய ராஜபக்ச சென்றதைவிடவும் மோசமாகத்தான் செல்ல நேரிடும். வாக்களித்த ஆதரவாளர்களையும் தேடமுடியாமல் போகும்-என்றார். (அ-எ-44)

# யாழ். இந்துக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் மணியளவில் கல்லூரி முதல்வர் இரட்ணம் செந்தில்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் நாவலப்பிட்டி மாவட்ட பொதுமருத்துவமனையின் எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணருமான மருத்துவ கலாநிதி கனகரட்ணம் காண்டீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-இ)

# கால்கோள் விழா

கொடிகாமம், ஜன. 30

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயமட்ட கால்கோள் விழா உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் க.உமாபாலன் தலைமையில், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத் திட்டமிடல் பிரிதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெரிவ்லியன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச- 25, 159)




கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய தை அமாவாசை உற்சவம் நேற்றுப் புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் அடியவர்கள் புடைசூழ வீதி உலா வந்து அதனைத் தொடர்ந்து கீரிமலைக் கண்டகி தீர்த்தக் கடலில் தீர்த்தோற்சவமும் நடைபெற்றது. (ச-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 30

மாதகல் பாணாகவெட்டி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் பெப்ரவரி 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு மண்டலாபிஷேகம் இடம்பெறும். கும்பாபிஷேகத்துக்கு முதல் நாளான 1 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-25)

# பண்ணிசை

யாழ்ப்பாணம், ஜன. 30

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ். மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், சங்கானைப் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், இலங்கை தேவாரப் பண்ணிசை வளர்ச்சிக்கழகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், தேவாரப் பண்ணிசை நிகழ்வு சண்டிலிப்பாய் மத்திய கலாசார நிலையத்தில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில், இந்தியா, தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி குமாரவயலூர் திருமிகு திருஞான பாலச்சந்திரர், திரு முறையை ஓதுவார்.

தேவார இசைக்கலைமாணிகள் சீர்காழியூர் சகோதரிகள் இரா. அகி லா, இரா. அருணா குழுவினர் கள்வளவாளர்களாகப் பங்குகொள்ளவுள்ளனர். (ச-25)

மட்டுவில் வடக்கு

# லூர்து அன்னைக்கு திருவிழா ஆரம்பம்!

மட்டுவில் வடக்கு லூர்து மாதாவின் வருடாந்தப் பெருவிழா இன்று மாலை 4.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 3ஆம் திகதியும், திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதியும் ஒப்புக் கொடுக்கப்படும் என்று ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஞானேந்திரன் அடிகளார் தெரிவித்துள்ளார். (ம-131)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org